## அறிவாற்றல் கருமையமொன்றின் அடித்தளமாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் செயற்திட்டம் மத்திய மட்டம் - 2017

அறிவாற்றல் கருமையமொன்றின் அடித்தளமாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் செயற்திட்டம் மத்திய மட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 5037–எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் 2 ஆம் பிரிவின் பீ.3 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகள் தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சினாலும் மாகாண மட்டத்தில் மாகாண சபைகளினாலும் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இந்த அறிக்கையானது தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான கருத்துரைகளைக் கொண்டுள்ளது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், செயற்திட்டமானது நாட்டின் பொதுக் கல்வித்துறை முகங்கொடுக்கும் சவால்களை குறிப்பிடுகின்ற கல்வித்துறை அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2012 – 2016 ஐ அமுல்படுத்துவதற்கு நிதி உதவியை வழங்குவதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ளது. மத்திய மட்டத்தில் கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகும். இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட அறிவாற்றலிற்கான அடித்தளமொன்றை வழங்குவதற்கு ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் அணுகுமுறை மற்றும் தரத்தினை உயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,000 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 64.1 மில்லியன் (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) தொகையாகும். அதில் 70 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான வீச்சிலான நிதிகள் மாகாணக் கல்வி அதிகாரிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி கல்வி அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2012 ஒக்தோபர் 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதியானது 2018 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது நிதிப்பிரமாணம் 150 மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தின் 2017 ஒக்தோபர் 16 இன் 258/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான வைப்புக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான கல்வி அமைச்சுடன் தொடர்புடைய 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்திற்கான முதலாவது பட்டோலையின் 126 ஆம் இலக்க தலைப்பின் ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தின் 2017 ஒக்தோபர் 16 இன் 258/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட கணனி வெளியீட்டுத் தகவல்கள், வருடாந்த மதிப்பீடுகள் மற்றும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றுடன் இணங்கியிருந்தது என்றும்,

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான வைப்புக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(இ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மத்திய மட்டத்திற்காக நிதியளித்தல் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் 2017 ஆம் ஆண்டின் போது | | 2017 திசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 30 | 3,300 | 737 | 3.91 | 595.64 | 29.21 | 4,093.70 |
| | **30** | **3,300** | **737** | **3.91** | **595.64** | **29.21** | **4,093.70** |

## 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்வி அமைச்சானது கல்வித்துறை அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2012 – 2016 இன் பிரகாரம், தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் 1005 தொழில்நுட்பவியல் ஆய்வுகூடங்களை நிர்மாணித்தல், அத்தகைய ஆய்வுகூடங்களுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் மாணவரின் செயலாற்றலினை மேம்படுத்துவதனூடாக உயர்தர விஞ்ஞானப் பிரிவிற்கான மாணவர் பங்குபற்றுதலை அதிகரிக்கும் பொருட்டு ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் என்பவற்றிற்காக நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அத்தகைய நோக்கங்களிற்காக கடன் பெறுகைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், தொழில்நுட்பவியல் ஆய்வுகூடங்களின் நிர்மாண வேலைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டு உரிய பாடசாலைகளின் அதிபர்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், கல்வித்துறை அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றில் உள்ளடக்கப்பட்ட உபகரணங்களை வழங்குதல் மற்றும் ஆசிரியர்களின் பயிற்சி போன்ற ஏனைய கூறுகளின் இலக்குகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணிசமானளவு அடையப்பட்டிருந்தன.

(ஆ) நாட்டின் கல்வித் தரத்தை முன்னேற்றுவதற்கும் பிரபலமான பாடசாலைகளிற்கு உள்நுழைவதிலுள்ள போட்டித்தன்மையை குறைப்பதற்கும் இயன்றதாக சமமான முறையில் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளிற்கு அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட வசதிகள் மற்றும் வளங்களை பகிர்ந்தளித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதை 2018 யூன் 20 இல் கல்வி அமைச்சினால் பிரசுரிக்கப்பட்ட பாடசாலை தொகைமதிப்பு – 2017 மீதான அறிக்கையானது சுட்டிக்காட்டியிருந்தது. அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பொழிப்பு கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

(i) வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், நாட்டின் பாடசாலை முறைமையானது 353 தேசிய பாடசாலைகள் உள்ளடங்கலாக 10,194 அரசாங்க பாடசாலைகளை கொண்டிருந்ததுடன் மாணவ சனத்தொகையானது 4.16 மில்லியன் மாணவர்களை கொண்டிருந்தது. அதில் 811,164 மாணவர்கள் மீளாய்வாண்டின் போது தேசிய பாடசாலைகளில் காணப்பட்டனர். ஆகையால், தேசிய பாடசாலைகளானது அனைத்து பாடசாலைகளினதும் 3.5 சதவீதத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அதே நேரம் 19.50 சதவீத மாணவர்கள் அத்தகைய பாடசாலைகளின் அங்கீகாரம் மற்றும்

பிரசித்தி காரணமாக தேசிய பாடசாலைகளில் காணப்பட்டனர். மேலும், அனைத்து பாடசாலைகளினதும் 50.63 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற 5,161 பாடசாலைகளின் மாணவ சனத்தொகை 200 மாணவர்களை விடக் குறைவாகக் காணப்பட்டதுடன் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களுடன் கிராமிய மட்டத்திலுள்ள பாடசாலைகள் இயங்குவதை இது சுட்டிக்காட்டுகின்றது. மேலும், அரசாங்க பாடசாலைகளின் ஆசிரிய சனத்தொகை 241,591 ஆசிரியர்களைக் கொண்டிருந்ததுடன் அதில் 26.75 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற 64,635 ஆண் ஆசிரியர்கள் மாத்திரம் சேவையில் காணப்படுகின்றதுடன் ஆசிரியத் தொழில் பெண் ஆசிரியர்களால் ஆதிக்கம் செய்யப்படுவதை இது சுட்டிக்காட்டுகின்றது.

(ii) தொகைமதிப்பின் பிரகாரம் அனைத்து பாடசாலைகளினதும் 45 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற 4,551 பாடசாலைகளிலுள்ள மாணவர்களிற்கு கற்கும் நோக்கங்களிற்காக கணனி வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வடமேல் மாகாணத்திலுள்ள 49 சதவீத மாணவர்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணனி வசிகளை பெற்றிருக்கவில்லை.

### 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

பாடசாலை அடிப்படையிலான கற்றல் முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு செயற்திட்டத்தின் மானியமொன்றாக நாடு முழுவதும் உள்ள 353 தேசிய பாடசாலைகளின் அதிபர்களிற்கு 2017 திசெம்பர் 29 இல் ரூபா 161 மில்லியன் தொகை அனுப்பப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மானியத்தை பயன்படுத்துவதற்கு அவர்களை அறிவுறுத்துவதற்கு வரிசை அமைச்சின் செயலாளரால் தனியான வழிகாட்டலொன்றும் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மானியப் பெறுகைகளை பயன்படுத்துவதன் செயன்முன்னேற்றம் தொடர்பாக 2018 ஏப்ரல் 27 வரையிலும் வரிசை அமைச்சின் தேசிய பாடசாலைகள் கிளைக்கு எந்தவொரு தகவல்களும் மீளப்பெறப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மானியத்தை பயன்படுத்துவதற்கு செயல்நடவடிக்கைத் திட்டங்கள் காணப்படாதமையால் மானியப் பெறுகைகள் உரிய நோக்கங்களிற்காக 2018 மார்ச் 31 வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது கிழக்கு மாகாணத்தின் கல்முனையிலுள்ள சாஹிரா கல்லூரி மற்றும் ஏறாவூரிலுள்ள அலிகர் மத்திய கல்லூரி என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.